சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் – தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தியது – அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை (இருபதாண்டு) எண். 109

நாள்: 01.08.2008

ஆடி 17,
திருவள்ளுவர் ஆண்டு

படிக்கப்பட்டது:

1. தூத்துக்குடி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். இ1/18217/2008 நாள் 17.7.2008.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண். 37161/2008/மாநஅ3 நாள் 18.7.08 மற்றும் 30.7.2008.

****

ஆணை:

தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து 5.8.2008 முதல் மாநகராட்சியாக செயல்பட உள்ள இந்த நகராட்சியில் சில அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உடனடியாக மேம்படுத்த ஏதுவாக அரசு ரூ.16.49 கோடி மானியமாக வழங்க வேண்டும் என்று தூத்துக்குடி நகராடசி ஆணையர் கேட்டுக் கொண்டதைக் குறிப்பிட்டு, அவற்றை வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசிடம் பரிந்துரை செய்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு, கவனமுடன் பரிசீலனை செய்தபின் 5.8.2008 முதல் மாநகராட்சியாக செயல்பட உள்ள தூத்துக்குடி நகராட்சியில் சில அடிப்படை, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கீழ்கண்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ள ஒருமுறை அரசு மான்யமாக ரூ.5.00 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) வழங்கலாம் எனவும், கூடுதல் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் என்றும் முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

தூத்துக்குடி நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரம்:-

| வ.எண். | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள் | 100.00 |
| 2. | தற்போது இயங்கிவரும் மாநகராட்சி அலுவலக கட்டிடத்தை மேம்படுத்துதல் | 40.00 |
| 3. | பாளையங்கோட்டை ரோடு மாட்டுப்பேட்டை பகுதியில் உள்ள மாநகராட்சி கட்டிடங்களை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுதல் | 475.00 |
| 4. | பூங்காக்கள் மேம்பாடு செய்தல்(PPP) | 48.00 |
| 5. | பேருந்து நிலையங்கள் மேம்பாடு செய்தல். மழைநீர் வடிகால் மேம்பாட்டு பணிகள், சாலைகள் மேம்பாடு செய்தல் | 125.00 |
| 6. | மேயர் / துணை மேயர் (ம) அலுவலர்களுக்கு 6 வாகனங்கள் வாங்குதல் | 57.00 |
| 7. | ஒயர்லஸ் கருவிகள் வாங்குதல் | 10.00 |
| 8. | நகரின் முக்கிய சாலை சந்திப்புகளில் உயர் கோபுர மின்விளக்குகள் (ம) மின்சார சேமிப்பு விளக்குகள் அமைத்தல் | 80.00 |
| 9. | மேயருக்கான அங்கி, நாற்காலி, மேசை, நினைவுதூண் செய்தல் | 16.00 |
| 10. | தூத்துக்குடி நகராட்சியில் மையத்தில் ஓடும் பக்கிள் ஓடையை சீரமைத்தல் – முதல் பகுதி | 698.00 |
| | மொத்தம் | 1649.00 |

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2217 – நகர்ப்பகுதி வளர்ச்சி – 05 – ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் 191. மாநகராட்சிகளுக்கு நிதியுதவி – 1 திட்டத்தில் சேராதது – AA மாநகராட்சிகளுக்கு உதவி மானியங்கள் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு. 2217 05 191 AA 0936)

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் புதிய திட்டப் பணிகள் குறித்ததாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில் இச்செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான

ஆணை நிதி(வ.செ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இத்தொகையினை முன்பணமாக பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இந்த ஆணையின் இருபடிகளை இணைத்து தவறாது நிதி (வ.செ.1) துறைக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2008–2009ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டில் சேர்த்து சட்டமன்ற பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு உரிய கருத்துருக்களை நிதி (BG.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே பத்தி–2ல் வழங்கி உத்தரவிட்டுள்ள மானியத் தொகையினைப் பெற்று ஆணையாளர், தூத்துக்குடி மாநகராட்சிக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை அ.சா.கு. எண். 47725/Fin(MAWS)/2008-1 நாள்: 1.8.2008–ன்படி நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கீடு பேரேடு எண். 523 (ஐநூற்று இருபத்து மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
ஆணையர், தூத்துக்குடி நகராட்சி, தூத்துக்குடி.
மாநில கணக்காயர், சென்னை –18 /35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 5.

நகல் :
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
நிதி (BG.1, BG.II, MAWS) துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நூ.2) துறை, சென்னை –9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.